**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.14/2025** |
| Deposition of witness | : | P.W.7 |
| Name | : | சுந்தரமூர்த்தி |
| Father's /Husband Name | : | மாணிக்கம் |
| Village | : | தியானபுரம் |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 78 |
| Occupation | : | ஓய்வு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 12th day of August 2025.
A1, A3 ,A4 absent. Petition under section 355 BNSS filed. Allowed.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது திருவாரூர் தியானபுரத்தில் திரு.வி.க நகரில் குடியிருந்து வருகிறேன். அளிவலம் சந்தானம் மகன் ராமகிருஷ்ணன் என்பவரை எனக்கு தெரியும்.. அவர் எனது குடும்ப நண்பர். அவருடைய மனைவி காயத்ரி. காயத்ரியின் தங்கை அபிராமியை எனக்கு தெரியும். அந்த அபிராமியை விஷ்ணுபுரத்தில் கடந்த 2014 ல் திருமணம் செய்து கொடுத்தார்கள். திருமணத்திற்கு பிறகு அபிராமி விஷ்ணுபுரத்தில் தனது கணவர் வீட்டில் வசித்து வந்தார். அபிராமியை அவரது கணவர் மாமனார் மாமியார் நாத்தனார் ஆகியோர் மிகவும் அடித்து கொடுமைப்படுத்தியதாக விஷ்ணுபுரத்தில் இருந்து வெங்கடேஷ் என்பவர் தகவல் சொன்னார். அந்த தகவலின் பேரில் நானும் ராமகிருஷ்ணன் அபிராமியின் தாயார், ராமகிருஷ்ணனின் தாயார், ராமகிருஷ்ணனின் மனைவி காயத்ரி ஆகியோர்களுடன் விஷ்ணுபுரத்திற்கு சென்று நாங்கள் அபிராமியை பார்த்த போது அபிராமி மிகவும் மோசமான நிலையிலும் நடக்க முடியாத நிலையிலும் தலையில் காயமும் அவரது இடது கையில் காயமும் இருந்தது. அபிராமியால் பேச முடியாத நிலையில் இருந்தார். அதை பற்றி அபிராமி மாமனார் மாமியாரிடம் கேட்டதற்கு சரியான பதில் எதுவும்

தரவில்லை. அபிராமியை அழைத்துக்கொண்டு அளிவலத்திற்கு ராமகிருஷ்ணன் வீட்டிற்கு சென்றோம். அபிராமிக்கு சாப்பாடு எதுவும் சரிவர கொடுக்காமல் இருந்ததாகவும் அவரை கவனிக்காமலும், அடித்ததாகவும் கூறினார். மிகவும் கொடுமைப்படுத்தியதாக கூறினார். இது சம்மந்தமாக நன்னிலம் அனைத்து மகளிர் போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்த விபரத்தை சொன்னேன். தற்போது அபிராமி அவரது தாயார் பராமரிப்பில் இருந்து வருகிறார். அபிராமி கணவரோ, கணவருடைய குடும்பத்தாரோ அபிராமிக்கு எதுவும் செய்யவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

எதிரி விஸ்வநாதனை எனக்கு தெரியுமா என்றால் அ.சா.1 மூலமாக தெரியும். எதிரியுடனும் அவரது குடும்பத்துடனும் நேரடி பழக்கம் கிடையாது. அ.சா.3 ஆகிய ராமகிருஷ்ணன் எனது குடும்ப நண்பர் என்றால் சரிதான். அ.சா.1 ஐ கொடுமைப்படுத்தியது அ.சா.1 சொல்லிதான் எனக்கு தெரியும். நான் அ.சா.1 வீட்டிற்கு செல்லும் வழக்கம் இல்லை. அ.சா.3 எனது குடும்ப நண்பர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.08.12 16:28:50 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.